அரசகரும மொழிகள் ஆணைக்கும் - 2022

---

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்கள் உரித்தாகின்ற வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்த தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மீள்மதிப்பீடுகளின் போது சொத்துக்களுக்குரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் வகுப்புக்கள் முழுமையாக மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் அடிப்படைச் சம்பள அளவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 880,682 குறைத்து பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் ஊழியர் பணிக்கொடை ஒதுகீடுகள் இதுவரை ஒன்றிணைந்த சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிக்கொடைகள் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு பணம் செலுத்துதலில் தாமதம் காரணமாக ரூபா 78,487 செலுத்த வேண்டிய மிகைக் கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த தாமதம் தொடர்பாக தற்போது அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென அறியத்தருகின்றோம். மேலும் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் 2022 ஆம் ஆண்டிற்குரிய வெளிப்படுத்தல்களாக சமர்ப்பிக்கப்படும். | ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் தாமதிக்காமல் குறித்துரைத்த திகதியில் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | தேசிய நல்லிணக்கம், உரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினால் 2016 யூன் 02 ஆம் திகதி குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு அத்திகதியே ஆணைக்குழுவின் பொறுப்பிற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனம் 2022 மார்ச் 22 ஆம் திகதி ரூபா 4,500,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2015 யூன் 24 ஆம் திகதி தேசிய மொழிகள் செயற்திட்டத்திற்காக கனடாவின் கனேடியன் இன்டர்நெஷனல் டெவலப்மென்ட் | தற்போதைய அமைச்சின் அங்கீகாரத்தின் பிரகாரம் வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | மோட்டார் வாகனத்தை முறையான பிரகாரம் கையேற்று நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஏஜென்சியினால் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்ட மோட்டார் சைக்களின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | மொத்தக் கிரயம் ரூபா 19,345,430 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு விடயத்திலும் கிரயத்தை உறுதிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | உரிய பெறுமானத் தேய்வுகளை உள்ளடக்கி நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கும், 2023 இன் கணக்குக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், சொத்துக்கள் தனித்தனியாக இனங்கண்டு பெறுமாத் தேய்வு ஒதுக்கீடுகளாக சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்லவேண்டியிருந்ததுடன் பெறுமானத் தேய்வு ஒதுக்கங்களை உறுதிப்படுத்துவதற்குரிய பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,548,362 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 552,524 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,100,886 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பெறுமானத் தேய்வு, புழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம் மற்றும் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 8,724,391 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயலமர்விற்காக | புத்தகங்களை பாடசாலை நூலகங்களுக்கு வழங்குவதற்கு | தேவையினை இனங்காணாமல் அச்சிடப்பட்டமை |

| | | | |
|---|---|---|---|
| | பகிர்ந்தளிப்பதற்கு 2012 ஆம் ஆண்டிற்குமுன் அச்சிடப்பட்ட எனினும் அந்தப் பணிகள் நிறைவேற்றாமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 292,855 ஆன 3998 சொல்லகராதி மற்றும் குறுங்கால பாடநெறி புத்தகங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென அறியத்தருகின்றோம். | மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இந்தப் புத்தகங்கள் பயன்பாட்டிற்கு எடுக்காமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். |
| (ஆ) | ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டே மாநர சபையில் இருந்து வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்தில் ரூபா 993,596 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கழுவும் அறையின் பெறுமதி மீண்டும் அறவிட வேண்டிய பெறுமதியாக கணக்கீடு செய்யப்படாமல் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | ஆணைக்குழு ஜனஜயசிட்டி கட்டிடத்தில் வாடகைக் காலம் முடிவடையும் போது தொடர்ந்தும் அந்த கழுவும் அறை சொத்தொன்றாக சபையின் ஆதனப் பெறுமதியில் சேர்க்கப்படுவதாயின் அந்த சந்தர்ப்பத்தின் போது சபையினது இணக்கப்பாட்டுடன் மாத்திரம் ஆணைக்குழுவிற்கு மீளளிப்புச் செய்யப்படுவதாக நகர ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. | இந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஆணைக்குழுவால் வருடாந்தம் ரூபா 7,284,000 வாடகையில் அலுவலகக் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. | அமைச்சிற்குரிய கட்டிட வளவில் இடவசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அவ்வாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் கோட்டே மாநகர சபைக்குரிய ஜனஜயசிட்டி கட்டிடத்தில் எஞ்சியிருந்த அளவை ஆணைக்குழுவிற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |